# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2026 சனவரி

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி A

### வினா இல. 01

இந்த வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் 25, இது 10 உப வினாக்களை உள்ளடக்கியுள்ளது. இதில் 5 பல்தேர்வு வினாக்களும் மூன்று கோட்பாட்டு ரீதியான வினாக்களும் இரண்டு கணித்தலை அடிப்படையாகக் கொண்ட வினாக்களும் இருந்தன. இங்கு பாடத்திட்டத்திலுள்ள கணக்கீடு மற்றும் கிரயவியல் பாடப்பரப்பிலுள்ள அடிப்படை அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

விடைத்தாள்களின் மதிப்பீட்டுச் செயன்முறையின்போது கீழ்வரும் பொதுவான பலவீனங்களும் தவறுகளும் அவதானிக்கப்பட்டன:

**1.1** இவ்வினாவானது ஒரு குறிப்பிட்ட ஆண்டின் இறுதியில் கொண்டுசெல்லல் பெறுமதியின் தேய்மானம் மற்றும் தீர்மானக் காரணிகள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்தனர். இது நேர்கோட்டுத் தேய்மான முறை பற்றி அவர்கள் கொண்டிருந்த தெளிவான புரிதலை நிரூபிக்கிறது. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகளால் கொண்டுசெல்லல் பெறுமதியைச் சரியாகக் கணிப்பிட முடியவில்லை. இது தேய்மானம் மற்றும் எச்சப் பெறுமதியின் செய்கை தொடர்பான எண்ணக்கரு பற்றிய தெளிவின்மையைக் காட்டுகிறது.

**1.2** இவ்வினா LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமம் பற்றிய பரீட்சார்த்திகளின் புரிதலைப் பரீட்சித்தது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். அதே வேளை ஒரு சிலர் சீராக்கத்தக்க மற்றும் சீராக்கமற்ற நிகழ்வுகள் பற்றிய புரிதல் இன்மையால் சரியாக விடையளித்திருக்கவில்லை.

**1.3** இவ்வினா APIT தொகையைப் பிரயோகித்து EPF, ETF ஐக் கணிப்பிட்டு, நிகர சம்பளத்தைக் கண்டறியுமாறு கோரியது. குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்திருந்த அதே வேளை ஒரு சிலரால் வினாவுக்கு விடையளிக்க முடியவில்லை.

**1.4** இவ்வினா 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்கொடுப்பனவுகள், அட்டுறுக்கள் மற்றும் கட்டணம் குறித்த அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் தவறான கணிப்பீடுகள் காரணமாக ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர்.

**1.5** இவ்வினா ஒரு குறிப்பிட்ட பொருளின் மறு கட்டளை மட்டம் பற்றிப் பரீட்சித்திருந்தது. இங்கு பொருள் கிரயவியலில் உள்ள ஒரு அடிப்படை கிரயவியல் சூத்திரத்தில் பெறுமானங்களை இட வேண்டியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர்.

**1.6** இவ்வினா நிதிக் கூற்றுக்களின் இரண்டு (2) பகுதிகளை (components) அடையாளங் காணுமாறு கேட்டிருந்தது. ஆனால் அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது நிதிக் கூற்றுக்களினுள் உள்ள கூறுகளை (elements) எழுதியிருந்தனர். ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியாக விடையளித்து, முழுப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.7** இவ்வினா நேர வீத ஊதிய முறைமையின் அனுகூலங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. மிகச் சில பரீட்சார்த்திகளே தேவையான மட்டத்தில் விடை அளித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. இது பாடப் புத்தகத்தை நன்கு வாசிக்காததைக் காட்டுகிறது.

**1.8** இங்கு 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியாக விடை அளித்திருந்தனர். ஆனால், சில பரீட்சார்த்திகள் பிரிவு 24 பற்றி போதிய அறிவைக் கொண்டிருக்காததால் விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.9** இங்கு வணிகத்தால் செலுத்த வேண்டிய VAT இனைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் அதனைச் சரியாகச் செய்திருந்தனர். எனினும் குறைந்தளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர்.

**1.10** இங்கு குறிப்பிட்ட வேலைக்கு வசூலிக்க வேண்டிய விலையைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை வெற்றிகரமாகக் கணிப்பிட்டிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் சரியான இலாப எல்லையைக் கணிப்பிடச் சிரமப்பட்டிருந்தனர். இது வேலைக் கிரயவியல் மற்றும் விலையிடல் எண்ணக்கருக்கள் பற்றிய அவர்களது புரிதலில் உள்ள இடைவெளிகளைக் காட்டுகிறது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

### வினா இல. 02

இவ்வினா தனியுடமை வியாபாரமொன்றின் ஆண்டிற்கான நிகர இலாபத்தையும் ஆண்டிறுதியில் உள்ள மூலதன (உரிமையாண்மை) மீதியையும் கணிப்பிடுவதைப் பரீட்சித்தது. சில பரீட்சார்த்திகள் உரிமையாண்மை மீதியைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை.

மேலும், சில பரீட்சார்த்திகளிடம் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) குறிப்பிடத்தக்களவான நேரம் காசேட்டைத் தயாரிப்பதற்குச் செலவிடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

(2) முற்பணமாகச் செலுத்திய வாடகை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(3) வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மொத்தக் காசில் 10% ஊக்கத்தொகையை சில பரீட்சார்த்திகள் கணக்கில் எடுக்கவில்லை.

(4) பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணிப்பிடுமாறு கேட்கப்பட்ட நிகர இலாபம் மற்றும் மூலதன மீதியைக் கணிப்பிட உரிமையாண்மை முறையை பயன்படுத்தவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 03

இவ்வினா எவ்வாறு பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகளையும் மூலதனக் கணக்குகளையும் தயாரிப்பது என்பது பற்றிய அடிப்படை அறிவைப் பரீட்சித்திருந்தது. மேலும் இவ்வினா வணிகத்திலிருந்து ஒரு பங்காளர் ஓய்வுபெறும் போதான சீராக்கங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவையும் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

ஆனால் மிகச் சில பரீட்சார்த்திகள் பின்வரும் காரணங்களால் நன்றாக விடையளித்திருக்கவில்லை:

(1) நன்மதிப்புச் சீராக்கம் சரியாகச் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனத்திற் கொள்ளாது நடைமுறைக் கணக்குகளில் உள்ள பதிவுகள் சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.

(2) நடைமுறைக் கணக்குகளுடன் தொடர்புடைய சில பதிவுகள் மூலதனக் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(3) நடைமுறையல்லாச் சொத்து மீள்மதிப்பீட்டிற்கான சரியான கணக்கீட்டுச் செய்கைகள் சில பரீட்சார்த்திகளால் செய்யப்படவில்லை. மேலும், மீள் மதிப்பீட்டு நயமானது பங்காளர்களின் மூலதனக் கணக்குகளில் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 04

இவ்வினா, இலாப நோக்கற்ற நிறுவனமொன்றிற்கான அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கையும் வருமான செலவினக் கணக்கையும் தயாரிக்குமாறு கேட்டிருந்தது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் பின்வருமாறு :

(1) வருமான செலவினக் கணக்கு சில பரீட்சார்த்திகளால் சரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(2) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்குடன் தொடர்புடைய வரவு, செலவுப் பதிவுகள் சில பரீட்சார்த்திகளால் மாறி மாறிப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(3) நத்தார் கொண்டாட்டத்துடன் தொடர்புடைய பரிவர்த்தனைகள் வேறாக அடையாளங் காணப்படவில்லை என்பதுடன் சில பரீட்சார்த்திகள் அனைத்துப் பரிவர்த்தனைகளையும் வருமான, செலவினக் கணக்கில் பதிவு செய்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

(4) வருமான, செலவினக் கணக்கிற்கான பொது வடிவத்தை சில பரீட்சார்த்திகள் பயன்படுத்தி யிருக்கவில்லை.

(5) மடிக்கணினிக்குச் (மூலதனச் செலவினம்) செலவு செய்த தொகை வருமான, செலவினக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 05

இவ்வினா **(a), (b)** ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது.

**(a)** இங்கு, எடையேற்றிய சராசரிக் கிரய முறையைப் பயன்படுத்தி, பொருள் Y002 இற்கான இருப்புப் பேரேட்டைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். மிகச் சில பரீட்சார்த்திகள் இருப்புப் பேரேட்டைச் சரியாகத் தயாரிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(b)** இவ்வினாவில் நிதிக் கணக்குகளுக்கும் கிரயக் கணக்குகளுக்குமிடையேயான இலாப இணக்கக் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் கேட்கப்பட்ட கூற்றைத் தயாரித்திருக்கவில்லை.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

## வினா இல. 06

**(a)** தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில், ஒவ்வொரு உற்பத்திப் பிரிவுக்கும் மேந்தலைகள் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதையும் சேவைப் பிரிவுக்கு கிரயம் ஒதுக்கப்படுவதையும் காட்டும் கூற்றைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

**(b)** இவ்வினாவில் தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சிக்கனக் கட்டளைக் கணியத்தைக் (EOQ) கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. EOQ இன் கணிப்பீடு என்பது கிரயவியலில் பொருள் கிரயவியலின் கீழான மிகவும் அடிப்படையான வினாவாகும். பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்திருந்தனர்.

மேலும், மிகச் சில பரீட்சார்த்திகள் EOQ ஐச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

# <u>பகுதி C</u>

## வினா இல. 07

இவ்வினா வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன் அது **(a), (b)** என இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்ததுடன், **பகுதி (b)** ஆனது நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பதைப் பரீட்சித்திருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் சில பரீட்சார்த்திகளால் முழுமையாகப் புள்ளிகளைப் பெறவும் முடிந்திருந்தது.

கீழ்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு :**

(1) முற்றடக்க வருமானக் கூற்றிற்காக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவத்தை மிகச் சில பரீட்சார்த்திகள் பின்பற்றியிருக்கவில்லை.

(2) சில பரீட்சார்த்திகளால் வருமான வரிச் சீராக்கம் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

(3) சில பரீட்சார்த்திகளால் மோட்டார் வாகனத்திற்கான கணக்கீட்டுப் பதிவுகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் இதனால், மோட்டார் வாகன விற்பனை மீதான சரியான இலாபம் சில பரீட்சார்த்திகளால் கணக்கிற் கொள்ளப்படவில்லை. அத்துடன் மோட்டார் வாகனம் மற்றும் அலுவலக உபகரணம் மீதான தேய்மானம் சரியாகக் கணக்கிற்கு எடுக்கப்படவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது.

(4) வியாபார வருமதிகளுக்கான சரியான விடுதொகை சில பரீட்சார்த்திகளால் கணக்கிற்கு எடுக்கப்படவில்லை.

(5) சில பரீட்சார்த்திகள் செய்முறைகளை இணைக்கவில்லை என்பதால் செய்முறைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சில மேலதிக புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் முற்பணமாகச் செலுத்திய அலுவலக வாடகையைச் சீராக்கம் செய்யவில்லை.

(7) சில பரீட்சார்த்திகள் ஆண்டிறுதியில் ஏற்பட்ட இருப்பு இழப்பினை சீராக்க மறந்திருந்தனர். மேலும் மிகச் சில பரீட்சார்த்திகள் 2025 மார்ச் 31 இலான இருப்பின் கிரயம் மற்றும் நிகர தேறத்தக்க பெறுமதி ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாட்டைச் சரியாகச் சீராக்கம் செய்திருக்கவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகளில் இருந்து அறவிடமுடியாக் கடன் ஏற்பாட்டைக் கழித்திருக்கவில்லை.

(2) நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்களுக்கிடையேயான வேறுபாடு பற்றி அறிந்திருக்கவில்லை.

(3) மிகச் சில பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றிற்காக பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வடிவத்தைப் பயன்படுத்தவில்லை.

(4) அலுவலக உபகரணம் மற்றும் மோட்டார் வாகனங்களின் திரண்ட தேய்மானம் சில பரீட்சார்த்திகளால் சரியாகக் கணக்கில் எடுக்கப்படவில்லை.

(5) சில பரீட்சார்த்திகளால் செலுத்த வேண்டிய வருமான வரி கணக்குகளில் காட்டப்படவில்லை.

(6) சில பரீட்சார்த்திகள் மோட்டார் வாகனத்தின் கையகப்படுத்தல் மற்றும் விற்பனை பற்றிய சீராக்கல் இல. 5 தொடர்பில் செயலாற்றியிருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.**

- - - -

**பரீட்சையில் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் :**

**(1)** பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தை நன்கு படித்து அதன் உள்ளடக்கங்களைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**(2)** செயல் வினைச் சொற்களின் வரைவிலக்கணத்தை விளங்கிக்கொண்டு, வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளிக்க பயிற்சி செய்தல் வேண்டும்.

**(3)** கடந்தகால வினாத்தாள்களின் உள்ளடக்கங்களைப் படித்து, குறைந்தது 2 – 3 பரீட்சை வினாத்தாள்களைப் பயிற்சி செய்து, வினாக்கள் எந்த அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்ள முயற்சி செய்தல் வேண்டும்.

**(4)** பரீட்சார்த்திகள் பரீட்சை எழுதுவதற்கு முன்னர், கடந்தகால வினாத்தாள்களை உரிய நேரத்தில் செய்து முடித்து பயிற்சி பெற வேண்டும். இது பரீட்சையில் நேர முகாமைத்துவத்தை மேம்படுத்த உதவும்.

**(5)** பரீட்சார்த்திகள் பரீட்சையை தெளிவான கையெழுத்தில் எழுதுதல் வேண்டும்.

**(6)** பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு விடையளிக்க ஆரம்பிப்பதற்கு முன்னர், பரீட்சை வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும்.

**(7)** வினாவை விளங்கிக் கொள்வதற்காகவும் வினாத்தாளில் உள்ள வினாக்களுக்கு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்குவதற்காகவும் பரீட்சார்த்திகள் பரீட்சையின்போது தெளிவான, சமநிலையான மனநிலையில் இருத்தல் வேண்டும்.

**(8)** பரீட்சார்த்திகள் தரப்பட்ட புள்ளிகளின் அடிப்படையிலேயே வினாக்களுக்கான நேரத்தை ஒதுக்குதல் வேண்டும். இதன் மூலம் வினாத்தாளில் தரப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் வினைத்திறனான முறையில் பரீட்சார்த்திகளால் விடையளிக்கக்கூடியதாக இருக்கும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், தேவைப்படுத்தப்பட்ட அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும் பொருத்தமானவாறு இலக்கங்கள் இடப்பட்டுள்ளனவா என்பதையும் ஒருமுறைக்கு இருமுறை பரீட்சித்துக்கொள்ள வேண்டும்.

- * * * -